1973 மார்ச் 31]

ஆசிரியர்களின் சிறு சேமிப்பு நிதி

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(இ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியத்தில் ஆசிரியர்களின் சிறுசேமிப்பு நிதியிலிருந்து ரூ. 7,500-க்கு மேல் கையாடல் செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

(உ) ஆசிரியர்களின் சேமிப்பை உரியவர்களுக்கு அரசு வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். ரூ. 8,065 கையாடல் செய்யப்பட்டது.

(இ) கையாடல் செய்த அரசு தரப்பு உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் கடைசியாக அவருக்கு சாதகம் அளிக்கக்கூடிய சந்தேகத்தை அளித்து தீர்ப்பு வழங்கிற்று. மேலும் சம்பந்தப்பட்ட ஆணையாளர், உதவியாளர் (ஆரோக்கியசாமி) மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கையாடல் செய்யப்பட்ட துகை பூராவையும் அவர்களிடமிருந்து மீட்க ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மொத்தத் தொகையான ரூ. 8,065-ல் முன்னாள் ஆணையாளர் திரு. ஜான்சம்பத்திடமிருந்து ரூ. 3,760-ம், திரு. ஆரோக்கியசாமியிடமிருந்து ரூ. 4,305-ம் திரும்ப மீட்கவேண்டுமென்று மாயவரம் கோட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(உ) ஆசிரியர்களுக்கு இத்தொகையை ஊராட்சி நிதியிலிருந்து முன் பணமாக எடுத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு இருக்கின்றது. இந்தப் பணம் பின்னர் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலித்து ஒன்றிய முன்பணம் உளவடை செய்யப்படும்.

Dance Performances at the Premises belonging to Educational Institutions

* 315 *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that the premises and grounds of Educational Institutions in Madras City are being used for conducting dances; and

(*b*) if so, the action taken thereon?

[1973 மார்ச் 31

கல்வி நிலையங்களுக்குச் சொந்தமான இடங்களில் நாட்டிய நிகழ்ச்சிகள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள கல்வி நிலையங்களின் கட்டிடங் களும் நிலங்களும் நடன நிகழ்ச்சிகள் நடத்துவதற்குப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பொது விழாக்கள் நடத்த, அரசுத் துறையினருக் காகவோ மத்திய அரசுக்காகவோ அல்லது அரசியல் தொடர் பில்லாத நிகழ்ச்சிகளுக்காகவோ கல்வி நிலையங்களுக்குச் சொந்த மான கட்டிடத்தை அல்லது நிலத்தை அல்லது இடத்தைப் பயன் படுத்த, குறிப்பிட்ட வரையறைகளுடன் அனுமதி வழங்கத் தமிழ் நாடு கல்வி விதிகளில் விதி 81-ன்படி உதவி பெறும் இடைநிலை அல்லது சிறப்புப் பள்ளிகளின் மேலாளர்களுக்கு அல்லது நிர்வாகி களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வித் துறைக்கு ஒவ்வாத கண்காட்சிகள் நடத்துவதை அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, அப்படி கல்வித் துறைக்கு ஒத்துவராத கண்காட்சிகள் நடத்துவதற்கு இடம் கொடுக்கக் கூடாதுதான். அப்படி பி.எஸ். ஹைஸ்கூலில் ஒரு கண்காட்சி வைக்கப்பட்டு, ரூ. 10 ஆயிரத்துக்கு கண்காட்சிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. வேறுபல கண்காட்சி கள் நடைபெறுகிற நிலைமைகள் இருந்தால், அவை கல்வியின் தரத்தையும் பள்ளிகளின் மதிப்பையும் குறைக்கக்கூடும் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட கண்காட்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடாது என்ற அளவுக்கு அறிவுரை கூறும்படி சொல்லப் பட்டிருக்கிறது.